முற்பகல் 11–25

3. அறிவிப்புகள்

(அ) உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் திரு. துரைமுருகன் மீதான உரிமை மீறல் பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து ஓர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதில், 25–10–2013 மற்றும் 28–10–2013 ஆம் நாட்களில் அவையில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து தி.மு.க. உறுப்பினர்கள் வெளியில் சென்று உண்மைக்குப் புறம்பாக பேட்டி அளித்தது அவை உரிமை மீறல் செயலாக இருப்பதால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மேலும், அந்த அறிவிப்பில் "கேவலம், பஸ் கண்டக்டர்" என்று தான் கூறாத வார்த்தையை கூறியதாக உண்மைக்கு மாறாகப் பேட்டி அளித்ததுடன், உறுப்பினர்கள் பேரவையில் உரையாற்ற வாய்ப்பளிக்கும் பேரவைத் தலைவரின் தனிப்பட்ட உரிமையை உள்நோக்கம் கற்பித்து கொச்சைப்படுத்தும்வகையிலும், அவைக்கு ஒவ்வாத சொற்கள் பயன்படுத்தப்படவில்லை என்று ஏற்கெனவே பேரவைத் தலைவர் தீர்ப்பளித்த பிறகு, அதனைக் கேள்வி கேட்கும்வகையிலும், தி.மு.க. உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் திரு. துரைமுருகன் ஆகியோர் பேட்டி அளித்திருப்பது, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தனது உரிமையையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் உரிமையையும், ஒட்டுமொத்தமாக இப்பேரவையின் உரிமையையும் மீறிய செயலாக உள்ளதால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.*

இதில் மேலெழுந்தவாரியாக, உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால், இதுகுறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காகப் பேரவை விதி 226–ன்கீழ் உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன். (குறுக்கீடுகள்)